# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1700 - 2011 අප්‍රේල් මස 01 වැනි සිකුරාදා - 2011.04.01

*1700 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 408 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 414 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, மாச்சு மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமான தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, வைகாசி மாதம் 03 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, பங்குனி 11.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | கங்க இஹல கோரளை | உலப்பனை பகுதியில் உடபலாத்த பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |
| கண்டி | கங்கவத்த கோரளை | தென்னிக்கும்புற பகுதியில் நாற்புறச் சூழலும் கங்கவத்தை பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |
| கண்டி | பன்வில்ல | பன்வில்ல பகுதியில் பாத்ததும்பற பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, வைகாசி மாதம் 03 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, பங்குனி மாதம் 11 ஆந் திகதி.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | மெததும்பற | பலிஸ்பத்துவ பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் பாத்ததும்பற பிரிவில் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

4-54

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, வைகாசி மாதம் 03 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, பங்குனி மாதம் 11 ஆந் திகதி.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | வெலிகம | வெலிகம நகர பிரிவின் பிறப்பு, இறப்பு (வைத்திய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை |

4-55

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - இரத்தினபுரி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, வைகாசி மாதம் 03 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, பங்குனி மாதம் 11 ஆந் திகதி.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| இரத்தினபுரி | இம்புள்ளே | இம்புள்ளே பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கடவத்த மற்றும் மெதகோரளைப் பிரிவில் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், இரத்தினபுரி |

5-57

---

**சுகாதார அமைச்சு**

*மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு - 2011*

*சுகாதார அமைச்சின்கீழ் மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (இந்த அமைச்சின்கீழ் நிருவகிக்கப்படும் வைத்தியசாலைகளின் தேவை கருதி ஆண் விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.)*

*1.* ***கல்வித் தகைமைகள்.***- *(அ) 2008, 2009 ஆம் ஆண்டில் க. பொ. த (உ. த.) பரீட்சைக்கு தோற்றி ஒரே அமர்வில் விஞ்ஞான பிரிவில் உயிரியல்/ கணிதம் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய அனைத்துப் பாடங்களிலும் (பொதுப்பரீட்சை தவிர்ந்த) தேர்ச்சியடைந்திருத்தல்.*

அத்துடன்

*(ஆ) க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களம்/தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

*(இ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு மேற்குறிப்பிட்ட இரண்டு பரீட்சைகளினதும் சான்றிதழ்களின் நிழல் பிரதிகள் (போட்டோ கொப்பி) உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.*

*2.* ***ஏனைய தகைமைகள்.***- *(அ) கட்டாயமாக இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.*

*(ஆ) 2011.04.30 ஆந் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 28 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.*

*(இ) உயரம் : 4 அடி 10 அங்குலத்திற்குக் குறையாதிருத்தல்.*

*(ஈ) திருமணமாகாதவராக இருக்க வேண்டும்.*

*(உ) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்ற விரும்புதலும், நல்ல சுகதேகியாகவும் இருத்தல் வேண்டும்.*

*(ஊ) மேற்படி தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்ப தாரர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர் என்பதுடன் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின்படி அவ்வாண்டில் சமமாகும்வகையில் மாவட்ட அடிப்படையின் மீது தேவையான எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்படும்.*

*தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தினுள் முன்றாண்டுகள் குடியிருப்பை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரியின் பெயர் வாக்காளர் பெயர்ப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்டில்லாவிடின் அவரது பெற்றோர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும்.*

*அவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பின் அப்பெயர்கள் தனது பெற்றோர்களின் பெயர்கள் என்பதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை அனுப்ப வேண்டும்.*

*3.* ***விண்ணப்பிக்க வேண்டிய முறை.***- *(அ) இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய 8 1/2 × 13 1/2 அங்குல அளவுள்ள தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்திக்கொண்டு விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள இலக்கம் 01 முதல் இலக்கம் 09 வரை உள்ள பிரிவுகள் முதல் பக்கத்திலும் இலக்கம் 10 ஆம் பிரிவு இரண்டாம் பக்கத்திலும் இலக்கம் 11 முதல் 13 வரையிலான பிரிவுகள் 03 ஆம் பக்கத்திலும் இருக்கும் வகையில் விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.*

*(ஆ) விண்ணப்பத்தை உரிய முறையில் பூரணப்படுத்தி விண்ணப் பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்ளுதல் - 2011'' எனக் குறிப்பிட்டு 2011.04.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு, ''பணிப்பாளர் (நிர்வாகம்) 01, சுகாதார அமைச்சு, ''சுவசிரிபாய'', இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10'' என்னும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்ப வேண்டும். தாமதமாகி பெறப்படும் விண்ணப்பங்கள் இரத்துச்செய்யப்படுவதுடன் தபாலில் காணாதுபோதல், தாமதித்தல் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*இலங்கை நிர்வாக சேவையில்/கல்வி சேவையில்/அரசாங்கத்தின் கணக்காளர் சேவையில்/அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்த சம்பளம் 2,40,360 இற்குக் குறையாத சம்பளம் பெற்றுக்கொள்ளும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.*

*(இ) விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள முத்திரைக் கூட்டில் ரூபா 500 இற்கான முத்திரை ஒட்டி கையொப்பம் இட்டு பெறுமதிநீக்கம் செய்ய வேண்டும்.*

*4.* ***பயிற்சித் திட்டம்.***- *(அ) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாணவ தாதிமார்களாக தாதிமார் பயிற்சிப் பாடசாலைக்கு உட்படுத்தப்படுவதுடன், அவர்கள் சிங்கள/தமிழ் மொழிமூலம் 03 ஆண்டுகள் பயிற்சிப் பாடத்திட்டம் ஒன்றைப் பயிலுதல் வேண்டும்.*

*(ஆ) பயிற்சியின் பொருட்டு உட்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தாதிமார் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவிலுள்ள சட்டதிட்ட கோவையொன்று பயிலுனர்களுக்கு வழங்கப்படும். இச்சட்டதிட்டங் களுக்கும் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் ஏனைய சட்ட திட்டங்களுக்கும் அவர்கள் அமைதல் வேண்டும்.*

(இ) பயிற்சிபெறும் கால எல்லையினுள் குறிப்பிட்ட பரீட்சைகளில் தேர்ச்சியடையாத அல்லது வேலையும் நடத்தையும் திருப்தியற்ற அல்லது தான் உட்படுத்தப்பட்ட பாடசாலையின் பரீட்சைகளையும் விடுமுறை நிபந்தனைகள் ஆகியவற்றை கடைப்பிடிக்கத்தவறும் பயிலுநர்களின் பயிற்சி எச்சந்தர்ப்பத்திலேனும் நட்டஈடு எதுவுமின்றி நிறுத்தப்படலாம். பயிற்சிக்காலத்தில் எந்தவிதமான விடுதலைகளுக்கும் உரித்தில்லாத தோடு இக்காலத்தில் வரவின்மைக்காக விசேட கொடுப்பனவிலிருந்து ஒரு தொகை கழிக்கப்படும். அத்தோடு பரீட்சை எழுதுவதற்கு 80% க்கு குறையாத வரவு இருத்தல் வேண்டும்.

(ஈ) தாதிமார் பாடசாலையொன்றில் பயிற்சிபெறும் காலத்தில் பயிலுனர்களுக்குக் கீழே குறிப்பிடப்படும் வகையில் கொடுப்பனவு வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| (1) முதலாம் வருடம் | - | மாதத்திற்கு ரூபா 12,920 |
| (2) இரண்டாம் வருடம் | - | மாதத்திற்கு ரூபா 13,040 |
| (3) மூன்றாம் வருடம் | - | மாதத்திற்கு ரூபா 13,160 |

பயிற்சியைத் திருப்திகரமாக பூரணப்படுத்திய பின்பு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த பயிலுநர்களுக்கு தாதிய உத்தியோகத்தர் III ஆம் தரத்தில் பதவி வெற்றிடங்களைக் கருத்திற்கொண்டு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமனங்கள் வழங்கப்படும்.

(உ) பயிற்சிபெறும் காலத்தில் பயிற்சிகளினின்றும் விலகிக் கொண்டால் அல்லது பயிற்சியைவிட்டுச் சென்றால் பயிற்சிக் காலத்தில் அவருக்கு/ அவளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் பொருட்டு செலவிடப்பட்ட பணமும் அவர்/அவள் திணைக்களத்திற்குச் செலுத்தவேண்டும். அவ்வாறு செலுத்தாவிடின் அப்பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5. **விவாகமாகாத நிபந்தனைகளும் உடன்படிக்கையும்.**- (அ) சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்களை அனுப்பும் திகதியில் விவாகமாகாதவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன் பயிற்சி பெற்றுக் கொள்ளும் மூன்றாண்டு காலத்தினுள்ளும் விவாகமாகாதிருத்தல் கட்டாயமாகும். அதற்கான உறுதிப்பாட்டை சமாதான நீதவான் ஒருவர்முன் கையொப்பமிட்டு அக்கடிதத்தை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(ஆ) மாணவ தாதிமார், தாதிமார் பயிற்சிப் பாடசாலைக்கு உட்படும் பொழுது திருப்திகரமாகப் பயிற்சியை முடிப்பதென்றும் பயிற்சியைப் பூரணப்படுத்திய பின்பு குறைந்தபட்சம் 10 ஆண்டு காலம் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் சேவையாற்றுவதென்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்துடன் உடன்படிக்கையொன்றிற்கு உட்படுதல் வேண்டும். சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் இக்கால எல்லை காலத்திற்குகாலம் தீர்மானிக்கப்படும்.

6. **சேவையில் ஈடுபடுத்தும் நியதிகள்.**- (அ) மேற்படி பயிற்சியின் பின்பு நடாத்தப்படும் இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகளின் பின் தரம் III தாதிய உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்படும் இப்பதவியானது விதவைகள், அநாதைகள் ஓய்வுதியத்துடன் கூடியதாகும்.

(ஆ) III ஆம் தரத்தின் பிரிவின் பதவிநிலை தாதிமார் பதவிகளுக்கு மூன்று ஆண்டுகள் தகுதிகாண் நிலைக்காலத்திற்கு அமைவாக நியமிக்கப்படும்.

7. **சேவை நிபந்தனைகள்.**- (அ) சகல பயிலுனர்களும் பயிற்சி ஆரம்பிக்க முன்பு மருத்துவ சோதனை செய்வித்துக்கொள்ளல் வேண்டும்.

(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (iv) இன்படி ரூபா 15,620- 4 ×180 - 6 × 240 - 11 × 320 - 20 × 360 - ரூபா 28,500 சம்பள அளவுத்திட்டத்தின்படி எம்ரி 7-2006 ''ஏ'' இற்கமைய தாதி உத்தியோகத்தர்கள் III ஆம் தரத்தில் பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களின்படி நியமிக்கப்படுவர்.

(இ) தாதிமார் சேவையின் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் நியமிக்கப்படும் கோட்பாடுகளின்படி புரியப்படும் இடமாற்றங்கள், நிதி உட்பட ஏனைய ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தினால் அடிக்கடி விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமைதல் வேண்டும்.

(ஈ) எந்த நேரத்திலும் எச்சந்தர்ப்பத்திலும் பகுதி 01, 02 மற்றும் 05 என்பவற்றில் ஏதாவது தவறு அல்லது பிழை என நியமனம் வழங்குப வர்களால் கண்டுபிடிக்கப்படுமிடத்து உடனடியாக நிறுத்தப்படுவர்.

(உ) இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்படாத பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு சம்பந்தமாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும்.

(வைத்தியர்) ரவீந்ர றுபேரு,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார அமைச்சு**

*மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு - 2011*

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :----.

   (ஆ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :----.

2. தபால் முகவரி (ஆங்கிலத்தில்) :----.

3. (i) நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) : [ ]

   (ii) மாவட்டம் (ஆங்கிலத்தில்) : [ ]

4. பிறந்த திகதி :-

   வருடம் :----, மாதம் :----, திகதி :----.

5. 2011.04.30 ஆந் திகதியன்று வயது :-

   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. ஆண்/பெண் :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

(உரிய கூட்டில் "✓" அடையாளம் இடுக)

7. நீங்கள் இலங்கைப் பிரசையா?

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(உரிய கூட்டில் "✓" அடையாளம் இடுக.)

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

9. உயரம் :- அடி :-----, அங்குலம் :-----.

10. (அ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சை (விஞ்ஞான பிரிவு பாடங்கள்) (தயவுசெய்து புள்ளிவிபரங்களை இணைக்கவும்.)

வருடம் :........... சுட்டெண் :............ வெட்டுப்புள்ளி :............

| பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சை :

முதலாம் அமர்வு :
(i) பரீட்சை வருடமும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.

| பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. கணிதம் | | |
| 2. விஞ்ஞானம் | | |
| 3. தமிழ் | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |
| 11. | | |
| 12. | | |

இரண்டாம் அமர்வு :
(i) பரீட்சை வருடமும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.

| பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |
| 11. | | |
| 12. | | |

11. ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா? :-

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(உரிய கூட்டில் "✓" அடையாளம் இடுக)

ஆம் எனில், தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக :.....................

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானதும் சரியானதுமாகும்.

கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது பிழையென காணப்படுமிடத்து நான் சேவையினின்றும் விலக்கப்படுவேன் என நன்கு அறிவேன்.

| |
|---|
| ரூபா 500 பெறுமதியான முத்திரை ஒட்டி அதன்மேல் கையொப்பம் இடுவதன் மூலம் இரத்துச்செய்யவும். |

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

13. **உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பதாரி ................................. எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................................. 2011 ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :-----.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**விவசாய அமைச்சு**

விவசாயத் திணைக்களம்

**விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவைப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011**

விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் III ஆந் தர விவசாயப் போதனாசிரியர்/ ஆராய்ச்சி உதவியாளர்/பண்ணை இயந்திர போதனாசிரியர்/ பொறியியல் முகாரி/ தொழில்நுட்ப அலுவலர்/ போதனாசிரியர் (ப. இ. ப. நி.) வேலை மேற்பார்வையாளர், கட்டிட கண்காணிப்பாளர் ஆகிய பதவிகளின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2011.04.30 ஆக இருப்பதுடன் அன்றைய தினம் விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில், மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.

3. பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் விண்ணப்பதாரிகள் கீழ்வரும் அடிப்படைக் கல்வித் தகைமைகளையும் தொழிற் தகைமைகளையும் பெற்றிருத்தல் அவசியமாகும்.

| பதவிக்குரிய குறியீட்டு இலக்கம் | பதவி | 3.1 கல்வித் தகைமைகள் | | 3.2 தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | க. பொ. த. (சா. த.) | க. பொ. த. (உ. த.) | |
| 1<br><br>2 | விவசாயப் போதனாசிரியர்<br><br>ஆராய்ச்சி உதவியாளர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல். | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் இரண்டு உட்பட மூன்று விஞ்ஞானப் பாடங்களில் சித்தியடைந்திருத்தல். | (i) குண்டசாலை, அங்குணகொலபெலஸ்ஸ, பெல்வெஹர, பிபிலை, லபுதுவ, வாரியபொல, வவுனியா, அநுராதபுரம், கரபிஞ்சா ஆகிய விவசாயக் கல்லூரிகளிலொன்றில் விவசாயத்திலான இரு வருட டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(ii) ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் வழங்கப்படும் விவசாயத்திலான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(iii) அக்வைனாஸ் நிறுவனத்தில் வழங்கப்படும் விவசாயத்திலான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(iv) அரச அங்கீகாரம்பெற்ற நிறுவனமொன்றால் வழங்கப்படும் இரு வருட விவசாயத்திலான டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(v) மேற்கூறிய தகைமைகளுக்கு சமமானதென இலங்கை தொழில்நுட்பவியல் சேவைகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தகைமைகளைப் பெற்றிருத்தல். |

<table>
<tr><th rowspan="2">பதவிக்குரிய குறியீடும் இலக்கமும்</th><th rowspan="2">பதவி</th><th colspan="2">3.1 கல்வித் தகைமைகள்</th><th rowspan="2">3.2 தொழிற் தகைமைகள்</th></tr>
<tr><th>க. பொ. த. (சா. த.)</th><th>க. பொ. த. (உ. த.)</th></tr>
<tr><td>3</td><td>பண்ணை இயந்திர போதனாசிரியர்</td><td rowspan="4">இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமைச் சித்தி.</td><td rowspan="4">ஒரே அமர்வில் பிரயோக கணிதம், தூய கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம் ஆகிய விஞ்ஞான பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் அடங்கலாக மொத்தம் (03) விஞ்ஞான பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.</td><td rowspan="4">(i) மொரட்டுவை பல்கலைக் கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தில் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா ;<br><br>அல்லது<br><br>(ii) தேசிய பயிலுனர் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா ;<br><br>அல்லது<br><br>(iii) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா ;<br><br>அல்லது<br><br>(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா ;<br><br>அல்லது<br><br>(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் I ஆம் பகுதியை வெற்றிகரமாக பூரணப்படுத்தியிருத்தல் ;<br><br>அல்லது<br><br>(vi) உயர் கல்வி அமைச்சைச் சேர்ந்த மேற்கூறிய சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களை தொடர்பு கொண்டு கருத்துக்களை பெற்ற பின் மேற்கூறிய தொழிநுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதென இலங்கை தொழில்நுட்ப சேவைகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில் நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.</td></tr>
<tr><td>4</td><td>பொறியியல் முகாரி</td></tr>
<tr><td>5</td><td>தொழில்நுட்ப அலுவலர்</td></tr>
<tr><td>6</td><td>போதனாசிரியர் (ப. இ. ப. நி.)</td></tr>
</table>

| | *பதவி* | *கல்வித் தகைமைகள்* | | *தொழிற் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| | | *க. பொ. த. (சா. த.)* | *க. பொ. த. (உ. த.)* | |
| 7 | வேலை மேற்பார்வை யாளர் | இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல். | பிரயோக கணிதம், தூய கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம் ஆகிய விஞ்ஞான பாடங்களில் ஏதாவது இரண்டு (02) பாடங்கள் அடங்கலாக மொத்தம் மூன்று விஞ்ஞான பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். | (i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தில் வழங்கப்படும் குடிசார் பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா ;<br>அல்லது<br>(ii) தேசிய பயிலுனர் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபையால் வழங்கப்படும் தேசிய பொறியியல் (குடிசார் பொறியியல் துறைக்கு) டிப்ளோமா ;<br>அல்லது<br>(iii) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் உயர் தேசிய பொறியியல் (குடிசார் பொறியியல் துறைக்கு) டிப்ளோமா ;<br>அல்லது<br>(iv) இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா ;<br>அல்லது<br>(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் I ஆம் பகுதியை (குடிசார் பொறியியல் துறைக்கு) வெற்றிகரமாக பூரணப் படுத்தியிருத்தல் ;<br>அல்லது<br>(vi) உயர் கல்வி அமைச்சைச் சேர்ந்த மேற்கூறிய சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களை தொடர்புகொண்டு கருத்துக்களைப் பெற்ற பின் மேற்கூறிய தொழிநுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதொரு இலங்கை தொழில்நுட்ப சேவைகள் சபையால் ஏற்றுக் கொள்ளப்படும்வேறு தொழில் நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல். |

**குறிப்பு**.- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலிருந்து டிப்ளோமாவினைப் பெற்றுக்கொண்டவர்கள் அப்பல்கலைக்கழகத்திலே டிப்ளோமாவுக்குரிய பாடத்திட்டத்தில் சித்திபெற்றிருக்கும் பட்சத்தில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திபெற்றிருக்கவேண்டிய தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட முடியும்.

**கவனிக்க**.- விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கவேண்டிய இறுதித் திகதியன்று அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3.3 ஏனைய தகைமைகள்.- அனைத்து விண்ணப்பதாரிகளும் கீழ்க்குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்துள்ளமை அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

இலங்கைப் பிரசையாக இருத்தல் ; உன்னத குணாம்சங்களைக் கொண்டவராக இருத்தல் ; நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு பொருத்தமான உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல்.

4. திணைக்களத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களில் குறித்த வெற்றிடங்களை அல்லது வெற்றிடங்கள் யாவற்றையும் நிரப்புவதற்கோ அல்லது நிரப்பாமல் விடுவதற்கோ நியமன அதிகாரிக்குக அதிகாரம் உண்டு.

**4. சம்பளமும் தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையும் :**

சம்பள குறியீட்டு இலக்கம் எம்என். 03/2006ஏ
சம்பள அளவுத்திட்டம்.- 15,005-4 x 180-6 x 240-11 x 320-20 x 360- ரூபா 27,885 ஆகும்.

நியமனம் பெற்ற 4 வருடங்களுக்குள் முதலாவது தகுதிகாண் தடைதாண்டிப் பரீட்சையிலும் 7 வருடங்களுக்குள் இரண்டாவது தகுதிகாண் தடைதாண்டிப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழி ஒன்றில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர் நியமனத் திகதியிலிருந்து 5 வருடத்திற்குள் க. பொ. த. (சா. த.) பரீட்சையின் மூலம் அரச கரும மொழியில் சித்தியடைதல் அல்லது அரச கரும மொழிகள் ஆணையாளரினால் நடாத்தப்படும் II ஆவது தொகுதிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். நியமனத் திகதியிலிருந்து 5 வருடங்களுக்குள் பதவிக்காக நிர்ணயிக்கப்பட்ட இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சியானது பொ. நி. சு. 07/2007 இன் 1(ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு அரச கரும மொழிகள் ஆணையாளரினால் நடாத்தப்படும் இரண்டாம் தர திறன்மட்ட மொழிக் கற்கைநெறிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இவ் அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளாமை அல்லது தகுதிகாண் தடைதாண்டிப் பரீட்சையில் குறித்த காலப்பகுதிக்குள் சித்தியடையாமை எதிர்கால சம்பள ஏற்றம் தள்ளிப்போடப்படுவதற்குக் காரணமாக அமையலாம்.

5. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்**.- (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள் அனாதை/தபுதாரர் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(ii) குறித்தொதுக்கப்படும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு கடமைப்பட்டிருப்பதோடு யாழ்ப்பாணம், அம்பாறை, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, கிளிநொச்சி, மன்னார், பொலன்னறுவை, மொனராகலை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள சேவை நிலையங்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமையளிக்கப்படும்.

(iii) 1426/34 ஆம் இலக்க 2006.01.06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டு தற்போது செயல்வலுவிலுள்ள இலங்கை தொழில்நுட்ப சேவை யாப்பு அச்சேவையிலும் ஆட்சேர்ப்புத் திட்டத்திலும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

6. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் விண்ணப்பத்தை A4 (21cmx29cm) அளவுடைய தாளொன்றை உபயோகித்து இரு பக்கங்களிலும் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பத்தில் 1 முதல் 4 வரையான பந்திகள் முன் பக்கத்திலும் 5 இல் இருந்து 7 வரை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சியவை 3 ஆம் பக்கத்திலும் அடங்குதல் வேண்டும். அதற்குரிய தகவல்கள் தமது சொந்த கையொப்பத்தினால் குறிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை தயாரிக்கும்பொழுது சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பப்படிவங்களும் முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் ஒளிப்படப் பிரதியினை (Photostate Copy) தம்வசம் வைத்திருத்தல் விரும்பத்தக்கது. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரம் பரீட்சை அறிவுறுத்தல்களில் குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமைந்துள்ளனவா என விண்ணப்பதாரி பரிசீலனை செய்து பார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

(ஆ) மேற்குறித்த 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட குறித்த 7 பதவிகளில் பல பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவை அனைத்தையும் ஒரேயொரு விண்ணப்பப்படிவத்தில் மாத்திரம் குறிப்பிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(ஈ) முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2011.04.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஊ) மேலே 3 ஆவது பந்தியின் அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்ட 1, 2 ஆம் இலக்க பதவிகள் 1 ஆவது வகுதி எனவும் 3, 4, 5, 6 ஆம் இலக்க பதவிகள் 2 ஆம் வகுதி எனவும் 7 ஆம் இலக்க பதவி 3 ஆம் வகுதி எனவும் கவனத்திற்கொள்க. ஒரு வகுதியில் 1 அல்லது அதற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆகும். விண்ணப்பிக்கும் வகுதிகளின் எண்ணிக்கை 2 அல்லது 3 ஆக இருக்குமிடத்து பரீட்சைக் கட்டணம் முறையே ரூபா 800, ரூபா 1,200 ஆகக் காணப்படும். அப்பணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003.02.13 இன்கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்ட செயலகத்தில் செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டினை (மூலப்பிரதியினை) விண்ணப்பப்படிவத்தின் குறித்த இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற் பிரதியினை தம் வசம் வைத்திருப்பது எதிர்காலத்தில் பயனளிக்கும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாது என்பதுடன் காசுக்கட்டளை, முத்திரை என்பனவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(எ) முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவமொன்று தபாலில் காணாமல் போனமை அல்லது தாமதமாகக் கிடைத்தமை தொடர்பாக திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது.

(ஏ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சட்டத்தரணி அல்லது அரச சேவையில் பதவிநிலை அலுவலர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஐ) ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

7. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- (அ) அனுமதி அட்டை.- விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளை பரீட்சை மேற்பார்வையாளர்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உடனேயே அதுபற்றிய அறிவித்தல் ஒன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி 2 அல்லது 3 நாட்களில் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியே இருப்பவர்கள் தம்வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்பத்திரத்தினதும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியுடன் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு தங்களது விண்ணப்பக் கடிதத்தின் பிரதியை தம்வசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

(இ) இப்பரீட்சைக்குத் தோற்றுதவதற்காக விண்ணப்பதாரிகளுக்கு எவ்வித பிரயாணச் செலவுகளோ வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்படமாட்டாது.

(ஈ) ஆளடையாளம்.- தாம் பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக கீழ்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(உ) பாடப்பரப்பு :

(i) விவேகப் பரீட்சை (1 மணித்தியால வினாத்தாள்) பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வுத் திறன், தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பனவற்றை மதிப்பிடுவதற்கான துறைசார் வினாக்களைக் கொண்டது - 100 புள்ளிகள்

(ii) தொழில்நுட்பவியல்சார் வினாத்தாள் (2 மணித்தியால வினாத்தாள்) - 100 புள்ளிகள்
பகுதி 01 – துறைசார் வினாப்பத்திரம் - (காலம் : 1 மணித்தியாலம்)
பகுதி 02 – கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள் கொண்ட வினாத்தாள் - (காலம் : 1 மணித்தியாலம்)

| | பதவி | தொழில்நுட்ப வினாத்தாளுக்குரிய பாடப்பரப்பு |
|---|---|---|
| 1 | விவசாய போதனாசிரியர் | இலங்கை பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு/ இலங்கை காலநிலை வலயங்கள் பற்றிய அறிவு/மண், பயிர் போஷணை/நெல் உற்பத்தி/ஏனைய வயற் பயிர்கள், உற்பத்தி/ காய்கறி உற்பத்தி/ பழ உற்பத்தி/ பயிர் பாதுகாப்பு/ மண் பாதுகாப்பின் முக்கியத்துவமும் பல்வேறு மண் பாதுகாப்பு முறைகளும்/ நீர்ப்பாசன முறைகளும் நீர் முகாமையும்/ பண்ணை இயந்திர மயமாக்கல்/ தேனீ வளர்ப்பு/ மலர் வளர்ப்பும் தரை அலங்காரப்படுத்தலும்/ பாதுகாக்கப்பட்ட பயிர்ச் செய்கைகள்/ |
| 2 | ஆராய்ச்சி உதவியாளர் | |

| | பதவி | தொழில்நுட்ப வினாத்தாளுக்குரிய பாடப்பரப்பு |
|---|---|---|
| | | கால்நடை வளர்ப்பு/விவசாய விரிவாக்கம் தாவர தடுப்புக்காப்பு தாவர பாதுகாப்பும் அதன் முக்கியத்துவமும்/உயிரியல் தொழில்நுட்பம்/விதை உற்பத்தி/இழைய வளர்ப்பு ஆகிய விடயங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பல்தேர்வு சுருக்க விடைகள் போன்ற வினாக்களைக் கொண்ட வினாப் பத்திரத்திலேயே விடையளிக்கவேண்டிய வினாப்பத்திரம். |
| 3 | பண்ணை இயந்திர போதனாசிரியர் | பல்வேறு வகையான ஒட்டு வேலைகளும் அதற்காக உபயோகிக்கப்படும் உபகரணங் களும்/உபகரணங்களைச் சரிப்படுத்தல்/ஒட்டுவேலைக்காக வேலைத்தொகுதிகளை ஒழுங்குபடுத்தல்/ கொல்லன் வேலைகளில் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் உலோக வர்க்கத்தை இனங்காணுதலும்/வெவ்வேறு வகையான வடிவங்களை இனங்காணுதல்/வேலைத் தளத்திலுள்ள இயந்திரங்களை இனங்காணுதலும் அதன் செயற்பாடும் பராமரிப்பும்/கொல்லன் வேலை/தச்சன் வேலை/வேலைத்தளத்தின் இயந்திர உபகரணம்/தகட்டு வேலை/வெட்டும் அலகு (Cutting blade) பொருட்கூறு களும் சாதாரண கணித்தலும்/மோட்டார் இயந்திரவியல்/மின்சார பொறியியல்/ பொருட்களின் கூட்டுச் சேர்மானங்களை இனங்காணுதல்/பொருள் மீது சக்தி செல்வாக்குச் செலுத்தும் போதுள்ள வினைத்திறன்/சக்தி கணப்பொழுது/பணி போன்ற சாதாரண கணிப்பீடுகள்/வேலைத்தளத்தில் இருக்கவேண்டிய பாதுகாப்பு முறைமை ஆகிய துறைகளை உள்ளடக்கும் வகையில் அது தொடர்பான கோட்பாடு மற்றும் செயன்முறை அறிவினை பரீட்சிப்பதற்காக தயாரிக்கப்பட்ட பல்தேர்வு, சுருக்க விடை போன்ற வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரத்திலேயே விடையளிக்க வேண்டிய வினாப்பத்திரம். |
| 4 | பொறியியல் முகாரி | |
| 5 | தொழில்நுட்ப அலுவலர் | |
| 6 | போதனாசிரியர் (ப. இ.) | |
| 7 | கட்டிட ஓவர்சியர்/ வேலை மேற்பார்வையாளர் | அளவையும் மட்டம் எடுத்தலும், கட்டிடப் பொருட்கள், கட்டிட நிர்மாணமும் மதிப்பீட்டறிக்கை தயாரித்தலும் வளைவுக் கட்டமைப்பு, தொய்வு விசை வரைபடம். சேவைகள்.- மின்சாரம், நீர், சுகாதாரம் போன்ற துறைகள் சம்பந்தமான கோட்பாடு, செயன்முறை அறிவினை பரீட்சிப்பதற்காக தயாரிக்கப்பட்ட பல்தேர்வு, சுருக்க விடையளித்தல் போன்ற வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரத்திலேயே விடையளிக்கவேண்டிய வினாப்பத்திரம். |

*(ஊ) மொழிமூலம்.-* இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி தாம் தோற்றும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றப்பட மாட்டாது.

(எ) இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கமைவான தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற முன் அனுமானத்தின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணம் செலுத்தி உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பப்பத்திரங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர் அனைவருக்கும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படுவதானது விண்ணப்பதாரி இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாகக் கருதப்பட மாட்டாது. கீழே (உ) இல் குறிப்பிடப்பட்ட உரிய 7 பதவிகளில் சில பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாக இருந்தால் அவை அனைத்தையும் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பப்பத்திரத்தை மாத்திரம் அனுப்பிவைத்தல் வேண்டும். பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் மேற்கொள்ளும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்கள் மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கும் தண்டனைகளுக்கு அவர் உட்படுத்தப்படுவார்.

*(ஏ) பரீட்சை நடைபெறும் இடமும் திகதியும்.-* இப்பரீட்சை 2011, ஓகத்து மாதம் கொழும்பிலும் கண்டியிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து கொழும்பில் மாத்திரம் பரீட்சை நடாத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் (விண்ணப்பித்த நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது) :-

| பரீட்சை நிலையம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |

*8.* **ஆட்சேர்ப்பு முறை.-** (i) விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை மூலம் இப்பரீட்சையின் புள்ளியினை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரியின் தகைமைகளைப் பரீட்சித்த பின்னர் தகைமைகளைப் பூர்த்திசெய்தவர்கள் மாத்திரம் வெற்றிடத்துக்காக தேர்வு செய்யப்படுவர். (நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

(ii) நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் எண்ணிக்கை விவசாய பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

(iii) தகைமைகள் பூரணப்படுத்தப்படவில்லை என நேர்முகப் பரீட்சையின்போது தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத் தன்மை நிராகரிக்கப்படும்.

(iv) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூரணப்படுத்தப்படாமலேயே பரீட்சைக்குத் தோற்றி பரீட்சையில் சித்தியடைந்தாலும் நேர்முகப் பரீட்சைக்காக கவனத்திற்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் எவ்வித அறிவித்தலுமின்றி அவரது விண்ணப்பப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

(v) போலியான தகவல்கள், திரிபுபடுத்தப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிப்பது எவராவது நியமனத்தை பெற்றாலும் அதுபற்றி தெரியவந்தவுடன் அவரது நியமனம் செல்லுபடியற்றதாக்கப்படுவதோடு அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

9. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக நியமன அதிகாரி மூலம் தீர்மானம் எடுக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானி பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பொதுவான சட்டதிட்டங்களுக்கேற்ப செயற்படுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

கே. என். மான்கோட்டே,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை.
2011.03.15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

**விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் தரம் III பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை**

Application for Open Competitive Examination for Recruitment to vacancies in the Grade III of the Sri Lanka Technological Service in the Department of Agriculture

பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :

| | |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |
| ஆங்கிலம் | 4 |

[ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

பரீட்சைக்கு தோற்ற உள்ள பரீட்சை நிலையம் :

கொழும்பு - 1
கண்டி - 2

[ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

| விண்ணப்பிக்கும் பதவி | பதவியின் இலக்கம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(வர்த்தமானி அறிவித்தலின் 3 ஆம் பந்தியைப் பார்க்க)

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்) :----.
(உதா : SILVA, A. B.)

1.2 முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்):----.

1.3 தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. நிரந்தர முகவரி :-

2.1 ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் :----.

2.2 சிங்களத்தில்/தமிழில் :----.

2.3 அனுமதி அட்டைகளை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.4 வதியும் மாவட்டம் :----.

3. பால் :----.

(ஆண் - 0, பெண் - 1) ☐

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

3.1 பிறந்த திகதி :-

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று வயது :-

வருடங்கள் : ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

விவாகமானவர் - 1

விவாகமாகாதவர் - 2 ☐

(உரிய இலக்கத்தினை கூட்டி னுள் எழுதவும்)

5. கல்வித் தகைமைகள் (மொழி மூலத்துடன்) :

(அ) கல்வி பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சை :

***முதல் அமர்வு :***

(i) வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை எண் :----.
(iii) மொழி மூலம் :----.
(vi) பரீட்சை முடிவுகள் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

***இரண்டாம் அமர்வு :***

(i) வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை எண் :----.
(iii) மொழி மூலம் :----.
(iv) பரீட்சை முடிவுகள் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

(ஆ) கல்வி பொதுத் தராதரப் (உயர் தரம்) பரீட்சை :

*முதல் அமர்வு :*

(i) வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை எண் :----.
(iii) மொழி மூலம் :----.
(vi) பரீட்சை முடிவுகள் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | |

*இரண்டாம் அமர்வு :*

(i) வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை எண் :----.
(iii) மொழி மூலம் :----.
(iv) பரீட்சை முடிவுகள் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | |

(இ) தொழிற் தகைமைகள் :-

| டிப்ளோமா | டிப்ளோமா வழங்கிய நிறுவனத்தின் பெயர் | சித்தியடைந்த வருடம் | பரீட்சை எண் | டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

7. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலகம்/மாவட்ட செயலக அலுவலகம் :----.
   7.1 கட்டணம் செலுத்தப்பட்ட திகதி :----.
   7.2 பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| |
|---|
| பரீட்சை கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினை<br>கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்<br>(பற்றுச்சீட்டின் நிழற்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளவும்.) |

8. இப்பரீட்சையின் நிபந்தனைகள் அனைத்தையும் பேணி நடக்க இணங்குகிறேன்.

9. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**.- இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிமொழிகிறேன். இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அறியநேர்ந்தால் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும் நியமனம் பெற்ற பின் அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் பரீட்சை நடைபெறுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களை பேணி நடப்பதாகவும் இணங்குகிறேன். அவ்வாறே நான் விண்ணப்பிக்கும் பதவிகளுக்காக ஒரு விண்ணப்பப்பத்திரத்தை மாத்திரம் அனுப்பிவைப்பதாகவும் உறுதியளிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................. எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் இவர் ................................. ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்)
திகதி :----.

*10.1* ***தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் இணைந்திருப்பவர்களுக்காக*** *(தேவையற்றதை கீறிவிடவும்).*

*மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி இப்பரீட்சையில் தோற்றுவதற்காக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உண்டு/இல்லை எனவும் அவர் இப்பரீட்சையில் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் இத்திணைக்களத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது/பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

----,
*திணைக்களத் தலைவரின் கையொப்பமும்*
*பதவிப் பெயரும்.*

*திகதி :----.*

*4-105*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை - 2011**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 01.04.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.03.2011 |
| | | வெள்ளி | 08.04.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.03.2011 |
| | | வெள்ளி | 15.04.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.04.2011 |
| | | வியாழன் | 21.04.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.04.2011 |
| | | வெள்ளி | 29.04.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.04.2011 |
| **மே** | .. | வெள்ளி | 06.05.2011 | .. | நண்பகல் 12 | வியாழன் | 21.04.2011 |
| | | வெள்ளி | 13.05.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.04.2011 |
| | | வெள்ளி | 20.05.2011 | .. | நண்பகல் 12 | வியாழன் | 06.05.2011 |
| | | வெள்ளி | 27.05.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.05.2011 |
| **யூன்** | .. | வெள்ளி | 03.06.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.05.2011 |
| | | வெள்ளி | 10.06.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.05.2011 |
| | | வெள்ளி | 17.06.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.06.2011 |
| | | வெள்ளி | 24.06.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.06.2011 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.